மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 125/2021**

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் தேதி திங்கட்கிழமை

வா.சா.2 சந்திரசேகர்

கு.வி: (பிரதிவாதி தரப்பில்)

வழக்கு எத்தனை இலக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் 3 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களின் நான்குமால் மற்றும் சர்வே எண் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் வாதி சொத்தை தனது சொத்து என்று கேட்டு பரிகாரம் கோரியுள்ளார். வாதி தனது வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் ஆதியில் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கிரையத்தின் அடிப்படையில் என்று சொல்லியுள்ளேன், ஆனால் யார் யாரிடம் எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி குமார் எனது மைத்துனர் என்றால் சரியல்ல, எனது ஊர்க்காரர். வழக்கு சொத்து சம்மந்தமாக வாதி குமார் மோசடியாக ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான், அது மோசடி பத்திரம் கிடையாது. மேற்படி ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட குற்றப்பிரிவில் ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த குற்ற வழக்கில் நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெறப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற உத்திரவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் நானும் ஒரு குற்றவாளி என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் நடவடிக்கை மூலமாக, நானும் குமாரும் தயார் செய்த ஆவணங்கள் செல்லாது என்று உத்திரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்திரவு பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றும் திருப்புவனம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி உத்திரவு பதிவு செய்யப்பட்டிருக்கும் விபரமும் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உத்திரவிற்கு

முன்னர் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுக்காக வந்த பொழுது நானும் வாதி குமாரும் மற்றும் சிலரும் சேர்ந்து தாக்கியதாக குற்றவழக்கு திருப்புவனம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. பட்டா, வரி ரசீது ஆகியவை 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல, அவை வாதி பெயரில் தான் இருக்கிறது. பட்டா, வரி ரசீது ஆகியவை வாதி பெயரில் தான் உள்ளது என்பதை காண்பிப்பதற்குரிய ஆவணங்களை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயரில் உள்ள பட்டா, வரி ரசீதுகளை நான் வாங்கிப்பார்த்துள்ளேன். பட்டா நம்பர் மற்றும் வரி ரசீதில் பசலி ஆகியவை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் தாவா சொத்துக்களை எந்தக்காலத்திலும் வாதி அனுபவம் செய்யவில்லை என்றும் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை